www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 30 JUNE 2013

இதழ் - 30 ஆனி 2013


# முற்போக்கு – ஜனநாயக சக்திகளுக்குள் பிளவு ஏற்படுவது, வலதுசாரிப் பிற்போக்கு சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும்!

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து அதன் சாரத்தைக் குறைக்க வேண்டும் அல்லது அந்தச் சட்டத்தை முற்றாகவே அரசியல் சாசனத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை சிங்களப் பேரினவாத சக்திகள் முன்வைத்து வலியுறுத்தி வருகின்றன. இந்தக் கோரிக்கைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மிகப்பெரிய பங்காளிக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சில சிரேஸ்ட அமைச்சர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பன அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்தால், தான் தனது அமைச்சுப் பதவியைத் துறக்கவும் தயங்க மாட்டேன் என, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இந்தச் சர்ச்சையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ இதுவரை வெளிப்படையாக கருத்துக்கள் எதையும் கூறவில்லையாயினும், அவரும் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. 13ஆவது திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தான் ஒருபோதும் வழங்கப் போவதில்லை என அவர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியுள்ளார். அத்துடன் அமைச்சரவை அந்தஸ்தோ, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் முக்கிய பதவி எதுவுமோ வகிக்காத ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஸ வெளிப்படையாகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து வருகின்றார். இதே கருத்தையே அமைச்சரவைப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெலவும் அடிக்கடி கூறி வருகின்றார்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இந்த விவகாரம் சம்பந்தமாக அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான




சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு மேலும் தீவிரமடைந்து, இடதுசாரிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்ற கவலை நாட்டை நேசிக்கும் முற்போக்கு – ஜனநாயக சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அதற்கான காரணம், 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஏதாவது திருத்தங்கள் செய்தால், தான் அரசிலிருந்து

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க....



படிப்பகம்

www.padippakam.com

# அறிவிக்கப்படாததும் அறிவிக்கப்பட்டவைகளும்

**வ**டமாகாணசபைக்கான தேர்தல் திகதி இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாவிடினும், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் நடாத்தப்படலாமெனக் கூறப்படுகின்றது. தமிழ்க்கட்சிகள் மட்டுமன்றி, தென்னிலங்கை கட்சிகளும் வடமாகாணசபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றன. முன்னர் எப்போதையும்விட அதிகமாக யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை கட்சிகளின் பிரமுகர்களின் பிரசன்னமும் காணப்படுகின்றது.

2009 ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் எந்த நேரத்திலும் நடாத்தப்படலாமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வடபகுதியில் மக்களை மீளக்குடியேற்றல், அத்தியாவசிய அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளல், கண்ணிவெடியகற்றல் போன்ற காரணங்களைக் காட்டி அரசு தேர்தல் நடாத்துவதை இழுத்தடித்து வந்தது. ஆனால் தேர்தலில் ஆளும் கட்சி தோற்றுப் போகலாம் என்பதால், தாங்கள் வெல்வதற்கான ஏதுவானதொரு சூழலை எதிர்பார்த்தே ஆளும் கட்சி தேர்தலை நடாத்துவதற்கு பின்னடித்து வருகின்றதே என்ற கருத்தே அரசியல் அவதானிகளிடையே நிலவி வருகின்றது. எனினும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சில சர்வதேச நாடுகளின் அழுத்தங்களால் ஆளும் கட்சி வடமாகாணசபைக்கான தேர்தலை நடாத்த வேண்டியதொரு சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது போலவே தெரிகின்றது.

அண்மைக்காலமாக அடிக்கடி (இந்த வருடத்தில் ஏற்கனவே மூன்று தடவை) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துவரும் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா போருக்கு பின்னரும் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னல் படுவதாக கூறிவருகிறார். அத்துடன் அவர் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர்த்த வேண்டுமென, அறிக்கைகள் விட்டதோடு, காணாமல் போனவர்களின் உறவினர்களை சந்தித்தல், கோயில் தரிசனம் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதையும் காணலாம். அரச படைகளின் பாதுகாப்பு என்ற காரணங்காட்டியே அரச படைகள் முகாமிட்டிருந்த பகுதிகளை சுற்றியிருந்த கிராமங்களிலிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் 1990 களில் – ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் – ஆரம்பிக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிட வேண்டும்.

பாராளுமன்றத்தேர்தல் (2010), கிழக்கு மாகாணசபை தேர்தல் (2012) போன்றவற்றில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஈட்டிய வெற்றிகளையும், 1970 களின் பின்னர் ஒருவித பேரெழுச்சியாக உருவான 'தமிழர்களின் வாக்குகள் தமிழ்க் (தேசியவாதக்) கட்சிக்கே' என்பனவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு வடமாகாணசபைக்கான தேர்தலிலும் தமிழ்தேசியக்கூட்டமைப்பினரே வெல்வார்கள் என்ற அபிப்பிராயமே எல்லா தரப்பினரிடையேயும் நிலவுகின்றது. தாங்களே வெற்றி பெறுவோம் என்ற இறுமாப்பிலோ என்னவோ, வடமாகாணசபைக்கான முதலமைச்சர் பதவிக்கு பொருத்தமானவராக தமிழ்தேசியக்கூட்டமைப்பு சார்பில் மாவை சேனாதிராசாவை தெரிவு செய்திருப்பதாக தமிழரசுக்கட்சி அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழ்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் இணக்கப்பாடு இல்லாமல் மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் பதவிக்கு தெரிவு செய்ய முடியாததென சுரேஸ் அணி – ஈ.பி.ஆர்.எல்.எவ் கூறியுள்ளது. இது முதலமைச்சர் பதவிக்கு தமிழ்தேசியக்கூட்டமைப்பினரிடையே கடும் போட்டி நிலவுவதையே எடுத்துக்காட்டுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் புலிகள் இயக்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த மூன்று முக்கிய பிரமுகர்களை வேட்பாளர்களாக நிறுத்தப்போவதாக உத்தியோகபூர்வமற்ற அறிவிப்புகள் வெளிவந்த வண்ணமுள்ளன. ஏதோ சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள விசுவாசம் காரணமாக புலிகளின் இந்த மூன்று முக்கிய பிரமுகர்களும் அக்கட்சியில் இணைந்து போட்டியிட முன்வந்திருக்கமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. புலிகளின் சகல மனிதவிரோத நடவடிக்கைகளுக்கும் (நேரடியாக, மறைமுகமாக) உறுதுணையாக இருந்த இந்த மூவருக்கும் உரிய தண்டனையும் வழங்கப்படவுமில்லை, இப்போது சுதந்திரமாக நடமாடும் இவர்கள் தமது கடந்தகால நடவடிக்கைகளுக்காக இதுவரையில் மக்களிடம் மன்னிப்புக் கோரவுமில்லை.

இன்னமும் அறிவிக்கப்படாத தேர்தல் தொடர்பாக இலங்கையிலுள்ள கட்சிகள் தயாரிப்பு வேலைகளை செய்யும் அதேவேளையில், தமிழ் மக்களுக்கு மகாணசபைகளுக்குள் வரையறுக்கப்பட்ட அதிகாரம் போதாது என தமிழ்தேசியக்கூட்டமைப்பு உட்பட புலிகளின் எச்சசொச்சங்களும் கூறிவருகின்றன. இது மனதுக்கு பிடித்தமில்லாத பெண்ணை ஏதோ நிர்ப்பந்தத்தின் பேரில் அல்லது மற்றவன் கலியாணம் செய்யக்கூடாது என்பதற்காக, அந்த பெண்ணையும் கலியாணம் செய்து வைத்துக்கொண்டு, இன்னொரு பெண்ணையும் தேடியலைவதற்கு ஒப்பானது. *

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



படிப்பகம்

www.padippakam.com



முனைவர் நாகேஸ்வரி அண்ணாமலை

# அமெரிக்க பூர்வ குடிகளின் அழிவுக்கு கால்கோள் இட்ட கொலம்பஸ்!

**நா**ம் பள்ளியில் படிக்கும்போது கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார் என்று ஆசிரியர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்போது அமெரிக்காவில் யாருமே இல்லை என்பது போலவும் கொலம்பஸ்தான் முதல்முதலாக அங்கு கால் வைத்தது போலவும் நமக்குப் போதிக்கப்பட்டது. ஆனால் உண்மை எதுவென்றால் கொலம்பஸ் அங்கு கால் வைத்தபோதே அங்கு நூற்றுக்கணக்கான பழங்குடி இனங்கள் வாழ்ந்து வந்தன.

இந்தப் பழங்குடி மக்கள் ஆசியாக் கண்டத்திலிருந்து சுமார் 25,000 ஆண்டுகளுக்கு முன் பேரிங் ஸ்ட்ரெயிட்ஸ் என்ற – அமெரிக்கக் கண்டத்தையும் ஆசியாக் கண்டத்தையும் இணைத்த – சிறு தரைப்பாதை வழியாக அலாஸ்காவிற்குள் நுழைந்து பின் படிப்படியாக வட அமெரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்களில் முழுவதுமாகப் பரவினர். இவ்வாறு இவர்கள் பரவுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பிடித்தன. கொலம்பஸ் அமெரிக்கத் தீவுகளுக்கு முதல்முதலாக வந்தபோது இரண்டு அமெரிக்கக் கண்டங்களிலும் இவர்களின் எண்ணிக்கை ஏழரைக் கோடியாகவும் வட அமெரிக்கக் கண்டத்தில் மட்டும் இரண்டரைக் கோடியாகவும் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது...

இந்தப் பழங்குடி மக்கள் யாரிடமும் சொத்துகள் இருக்கவில்லை. எல்லா நிலமும் எல்லோருக்கும் பொது. ஒன்றாக வேட்டையாடியதை அந்தக் கிராமங்களிலிருந்த எல்லோரும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். வீடுகள் எல்லோருக்கும் பொதுவானவை. ஒவ்வொரு வீட்டிலும் பல குடும்பங்கள் வசித்து வந்தன. ஆண்களுக்குச் சமமான உரிமைகள் பெண்களுக்கும் இருந்தன. கிராமத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்களுக்கும் இருந்தது. அவர்கள் பெண்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் அவர்களை நீக்கும் உரிமையும் அவர்களுக்கு இருந்தது. கடலில் மீன் பிடிப்பதும் வேட்டையாடுவதும் ஆண்கள் வேலை. விவசாயம் செய்வதும் கிராமத்தில் மற்ற விவகாரங்களைக் கவனிப்பதும் பெண்கள் வேலை. ஆண்களும் பெண்களும் வேலைகளைப் பகிர்ந்து கொண்ட இந்தச் சமூகத்தில் பெண்களைத் தாழ்ந்தவர்களாக நடத்தவில்லை. குழந்தைகளையும் சீராக வளர்த்து சிறந்த குடிமக்களாக்கினர்...

பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வாழ்ந்தவர்கள் ஆசியாக் கண்டத்தில் கிடைக்கும் தங்கம், பட்டு, மசாலாச் சமான்கள் முதலியவற்றை வாங்கிக்கொண்டு வர விரும்பினர்....மார்க்கோ போலோ போன்ற பயணிகள் இவர்களுக்கு முன்பே பல வெளிநாடுகளுக்குச் சென்று பல அரிய பொருட்களைக் கொண்டு வந்திருந்தார்கள். ஸ்பெயின் நாட்டவர்களும் இம்மாதிரி இந்தியா போன்ற நாடுகளுக்குப் போக விரும்பினர். அங்கு எப்படிச் செல்வது? துருக்கியர்கள் மத்தியத் தரைக்கடலுக்குக் கிழக்கில் உள்ள பகுதியைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டதால் தரை மார்க்கமாக ஆசியாவுக்குச் செல்வது எளிதாக இருக்கவில்லை. அதனால் கடல் வழியாக ஆசியாவுக்குச் செல்ல ஒரு மார்க்கத்தைத் தேட முயன்றனர். உலகம் உருண்டை என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் ஆசியாக் கண்டத்திற்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கும் இடையில் அமெரிக்கா என்ற ஒரு பெரிய நிலப்பரப்பு இருக்கிறது என்பது தெரிந்திருக்கவில்லை. அதனால் ஐரோப்பாவிலிருந்து மேற்கு முகமாகக் கடல் வழியாகச் சென்றால் ஆசியாவை அடைந்து விடலாம் என்று முடிவு செய்து கப்பல் பயணம் மேற்கொண்டனர். இப்படியாக அட்லாண்டிக் கடலைக் கடக்க முற்பட்ட முதல் வீரர் கொலம்பஸ்.

கொலம்பஸின் சொந்த ஊர் இத்தாலியிலுள்ள ஜெனோவா என்றாலும் அவர் ஆசியாவுக்குச் சென்று தங்கம் முதலிய பொருள்களைக் கொண்டு வருவதற்கான செலவை ஏற்றுக் கொண்டவர்கள் ஸ்பெயின் நாட்டின் அரசியும் அரசனும். அப்படிக் கொண்டு வரும் சாமான்களில் பத்து சத விகிதத்தையும், பெரிய கடல் வீரன் என்ற பட்டத்தையும் கொலம்பஸுக்குக் கொடுப்பதாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. கொலம்பஸ் மூன்று கப்பல்களில் – அதில் சான்டா மரியா என்பது நூறு அடி நீளம் கொண்ட பெரிய கப்பல் – 39 ஆட்களோடு பயணம் புறப்பட்டார். அவர் கப்பல் ஓட்டுவதில் கைதேர்ந்தவர் என்பதால் அதுவரை யாரும் கடந்திராத அட்லாண்டிக் கடலைக் கடந்து ஆசியாவிற்குச் செல்லத் துணிந்தார். கிளம்பி முப்பத்து மூன்றே நாட்களில் பஹாமாத் தீவுகள் ஒன்றில்



படிப்பகம்

www.padippakam.com

கொலம்பஸும் அவருடைய ஆட்களும் வந்திறங்கினர். அவர்கள் வந்திறங்கிய அந்த நாள் - 1942 அக்டோபர் 12 - அவர்கள் வந்திறங்கிய தீவில் வாழ்ந்து வந்த மக்களுக்கு மட்டுமல்லாமல் அமெரிக்கக் கண்டத்தில் வாழ்ந்து வந்த பல நூற்றுக்கணக்கான பழங்குடி மக்களுக்கும் இருண்ட நாளாக அமைந்துவிட்டது. அவர்களின் அழிவு அன்றிலிருந்து தொடங்கியது.

## கொலம்பஸ் இழைத்த கொடுமை

கொலம்பஸின் கப்பலைக் கண்டவுடனேயே அமெரிக்கக் கண்டத்திற்குப் பக்கத்தில் இருந்த தீவில் வசித்து வந்த அப்பாவிப் பழங்குடி மக்கள் அவர்களை வரவேற்பதற்காகக் கடலில் நீந்திக் கப்பலோரம் வந்தனர். வந்தவர்களை விருந்தினர்களாக நினைத்து அவர்களுக்கு உணவு, நீர், அன்பளிப்புகள் ஆகியவற்றைக் கொடுத்தனர். அந்தப் பழங்குடி மக்களைப் பற்றி பின்னொரு முறை எழுதிய குறிப்பில் கொலம்பஸ், 'அந்த ஜனங்கள் அவர்களிடம் இருந்த எல்லாப் பொருள்களையும் பங்கிட்டுக் கொண்டனர். அவர்கள் அழகிய உடலமைப்பு கொண்டவர்களாக இருந்தனர். ஆயுதங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை. நாங்கள் எங்களிடம் இருந்த கத்தியைக் காட்டியவுடன் அதை எப்படிக் கையாள்வது என்றுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. அதன் ஓரத்தில் தங்களது கைகளை வைத்து காயம் உண்டாக்கிக் கொண்டனர். மூங்கிலில் செய்த ஈட்டிகள்தான் இவர்களிடம் இருந்த ஆயுதங்கள்' என்று குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட நல்ல குணம் படைத்த அப்பாவி மக்களில் சிலரைச் சிறை செய்து தங்கம் இருக்கும் இடத்தைக் காட்டும்படி துன்புறுத்தினார் கொலம்பஸ். அப்போதே சிலரை அடிமைகளாகப் பிடித்து ஸ்பெயினுக்குக் கொண்டு சென்றார். அங்கு வீட்டு வேலை செய்வதற்காக அவர்களை விற்றார்.

முதல்முறை ஐரோப்பாவிற்குத் திரும்பிச் செல்லும்போது கொலம்பஸ் தன்னுடன் வந்த முப்பத்தொன்பது பேரையும் அந்தத் தீவிலேயே விட்டு விட்டு தான் அடுத்த முறை வரும்போது நிறையத் தங்கம் சேர்த்து வைக்கும்படி கூறிச் சென்றார். ஸ்பெயின் அரசரிடமும் அரசியிடமும் சென்று, 'நான் சந்தித்த மக்கள் அப்பாவிகளாக இருக்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் எதையும் நம்மிடம் கொடுத்து விடுகிறார்கள். இன்னொரு முறை அங்கு செல்ல நீங்கள் உதவினால் வேண்டிய அளவு தங்கமும் நீங்கள் கேட்கும் அளவு அடிமைகளையும் என்னால் கொண்டு வர முடியும்' என்றார். இதை முழுவதுமாக நம்பிய மன்னன் கொலம்பஸுக்கு இரண்டாவது முறை செல்வதற்குப் பதினேழு கப்பல்களைக் கொடுத்து ஆயிரத்து இருநூறு ஆட்களையும் உடன் அனுப்பினார்...

ஐரோப்பியர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருந்த அந்த அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர். தங்களின் அடிமைகளாகவும் விளையாட்டுப் பொருட்களாகவும் ஆக்கினர். கொலம்பஸின் ஆட்களோடு இருந்து பின்னால் மனம் மாறி அந்த அப்பாவி மக்களைப் பற்றி எழுதிய ஒரு பாதிரியார் எழுதியுள்ள குறிப்பில் ஒரு கிளியைப் பிடித்துச் சென்று கொண்டிருந்த இரண்டு பழங்குடிப் பையன்களைப் பார்த்த கொலம்பஸின் ஆட்கள் அந்தப் பையன்களின் தலையைச் சீவிவிட்டுக் கிளியை எடுத்துக் கொண்டதாகக் கூறினார்.

(மேலே தரப்பட்டுள்ள பகுதி தமிழகத்தைச் சேர்ந்தவரும், கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்து வருபவருமான நாகேஸ்வரி அண்ணாமலை அவர்கள் எழுதி, 'அடையாளம்' பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள "அமெரிக்காவின் மறுபக்கம் – ஒரு சமூக பொருளாதாரப் பார்வை" என்ற நூலில் இருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் எப்படி அமெக்காவில் வாழ்ந்த கோடிக்கணக்கான பூர்வ குடி மக்களை ஐரோப்பியர்கள் ஈவிரக்கமின்றி அழித்துவிட்டுத் தமது குடியேற்றங்களை அங்கு நிறுவிக் கொண்டனர் என்பதைப் பல புள்ளி விபரங்களுடன் நாகேஸ்வரி விளக்குகின்றார். இன்றைய உலகின் மிகப் பலம்வாய்ந்த அமெரிக்க வல்லரசின் பின்னணியில் இரத்தத்தால் எழுதப்பட்ட துயரக்கதை மறைந்திருப்பதை அவரது நூல் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது) *

## தோழர் பொன்னுத்துரைக்கு அஞ்சலி

**இலங்கையின் வட பகுதியில் 1940களில் தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகளை ஆரம்பித்த போது, அவருடன் இணைந்து செயல்பட்ட தோழர்களின் தலைமுறையைச் சேர்ந்த தோழர் பொன்னுத்துரை அவர்கள் தமது 93ஆவது வயதில் அண்மையில் காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட தோழர் பொன்னுத்துரை, கட்சியின் நல்லூர் கிளையின் அங்கத்தவர்களாகச் செயல்பட்ட முன்னோடி செயற்பாட்டாளர்களான இராமசாமி ஐயர், அரசடி இராசையா, தேர்க் கந்தசாமி போன்றவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஒருவராவார்.**

**தனது இறுதிக்காலம் வரை, அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் அடி பிசகாத, இலட்சியப் பிடிப்புள்ள ஒரு உண்மையான கம்யூனிஸ்ட்டாகவே தோழர் பொன்னுத்துரை வாழ்ந்தார்.**

**அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு 'வானவில்' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், தோழர் பொன்னுத்துரைக்கு தனது இதயபூர்வமான அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.** *


படிப்பகம்

www.padippakam.com

# தேசிய முதலாளி வர்க்கமும் தேசிய விடுதலை இயக்கமும்

ஒரு முற்குறிப்பு:

இலங்கை 1948இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெறும்வரை, இலங்கை முதலாளி வர்க்கத்திற்குள் இருந்த முரண்பாடுகள் வெளிவரவில்லை. 1947இல் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்த அரசாங்கத்திலும், அந்தக் கட்சியிலும் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கவும் அங்கம் வகித்தார். ஆனால் அந்த அரசு ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான அரசியல் – பொருளாரதாரக் கொள்கைகளைப் பின்பற்றியபோது, அக்கட்சியில் பிளவு ஏற்பட்டது. பண்டாரநாயக்க அக்கட்சியிலிருந்து வெளியேறி, 1951இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார்.


சுதந்திரக் கட்சி ஏகாதிபத்திய விரோத, தேசபக்த கொள்கைகளைப் பின்பற்றும் ஒரு கட்சியாக இருந்தது. அதாவது இலங்கையின் தேசிய முதலாளிகளை அது பிரதிநித்துவப்படுத்தியது. அதனால் மக்கள் ஆதரவை அது ஓரளவு பெற்றது.

இந்த நிலைமையில் ஐ.தே.க அரசு ஏகாதிபத்தியவாதிகளின் ஆலோசனைப்படி மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுத்த பொழுது, அதற்கெதிராக இடதுசாரி கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜ, பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தையும், பொதுமக்களையும் அணி திரட்டி மாபெரும் ஹர்த்தால் போராட்டம் ஒன்றை 1953 ஓகஸ்ட் 12ஆம் திகதி நாடு பரந்த ரீதியில் நடாத்தினார்கள். அதனால் அரச நிர்வாகம் முற்றிலுமாகச் சீர்குலைந்து ஐ.தே.க அரசு வீழ்ச்சி அடைந்தது.

டி.கே.டி ஜினேந்திரபால

இந்த மக்கள் எழுச்சியை பண்டாரநாயக்க தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். 1956இல் நடந்த பொதுத் தேர்தலில் அவர் அமைத்த 'மக்கள் ஐக்கிய முன்னணி' அமோக வெற்றி பெற்றதற்கு இந்த ஹர்த்தால் எழுச்சி காரணமாய் அமைந்தது. பண்டாரநாயக்கவின் புதிய தேசிய முதலாளித்துவ அரசாங்கம், பல ஏகாதிபத்திய விரோத, தேசிய சார்பான நடவடிக்கைகளை எடுத்தது. அதன் காரணமாக ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான பிற்போக்கு சக்திகள் அவரை 1959 செப்ரெம்பரில் படுகொலை செய்தன.

அதைத் தொடர்ந்து அவரது மனைவி சிறீமாவோ 1960 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறினார். அவரும் தனது கணவரின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளைத் தீவிரமாகத் தொடர்ந்தார். எனவே அவரது ஆட்சியையும் வீழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாத சக்திகளும், உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளும் பல வழிகளிலும் முயன்றன. 1962இல் அவரது ஆட்சியை வீழ்த்துவதற்கு இராணுவச் சதி ஒன்றுக்கும் முயற்சிக்கப்பட்டது.



இந்த நிலைமையில் சிறீமாவோ இடதுசாரிகளின் உதவியை நாடினார். அந்த நேரத்தில் இடதுசாரி கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பிலிப் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி என்பன இணைந்து, இடதுசாரி ஐக்கிய முன்னனி என்ற ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கி, தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் பிரசித்தி பெற்ற 21 கோரிக்கைகளை முன் வைத்திருந்தன. அதனால் இடதுசாரி முன்னணி மீது தொழிலாளி வர்க்கம் மட்டுமின்றி, நாட்டு மக்கள் அனைவரும பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

ஆனால் தொழிலாளி வர்க்கத்தினதும், நாட்டு மக்களினதும் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பளிக்காமல், சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா சிறீமாவோவின் அழைப்பை ஏற்று, தனது கட்சியை அரசாங்கத்தின் பங்காளி ஆக்கிக்கொண்டு, நிதி அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொண்டார். இந்தத் துரோகம் பிற்காலத்தில் முழு இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலத்தையும் மிகவும் மோசமாகப் பாதிப்பதற்கு வழி வகுத்தது.

இதேநேரத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் குருஸ்சேவ் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மாஓசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் முரண்பாடு தோன்றி பெரும் பிளவுக்கு இட்டுச் சென்றது. அந்தப் பிளவு இலங்கை உட்பட உலகம் முழுவதும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் நிகழ்ந்தது. இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவுக்கு, சிறீமாவோ பண்டாரநாயக்கவின் தேசிய முதலாளித்துவ அரசுடனான அணுகுமுறை என்ன என்ற பிரச்சினையும் ஒரு பிரதான காரணியாக அமைந்தது. இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் சோவியத் சார்பு அணியும் சறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கங்களில் பங்கு பற்றும் ஒரு கட்சியாக மாறிவிட்டது. (இன்றும் அந்நிலை தொடர்கிறது)

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் (1964 யூன்) இந்தக் கட்டுரையை, சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் உதவி தேசிய அமைப்பாளரான தோழர் டி.கே.டி.ஜினேந்திரபால கட்சியின் தத்துவார்த்த சஞ்சிகையான "கம்யூனிஸ்ட்" இதழில் எழுதினார்.


படிப்பகம்

www.padippakam.com

அவர் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள மலையகப் பெரும் தோட்டங்களை 1970இல் ஆட்சிக்கு வந்த சிறீமாவோ தலைமையிலான அரசு தேசியமயமாக்கிவிட்டது. அத்துடன் காணி உச்ச வரம்பை 50 ஏக்கராக்கி அந்த அரசாங்கம் ஓரளவு நிலச் சீர்திருத்தத்தையும் நிறைவேற்றியது.

இந்தக் கட்டுரை எழுதப்பட்டு சுமார் 50 வருடங்கள் ஆகிவிட்டாலும், இன்று 13ஆவது திருத்தம் சம்பந்தமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், அன்று தோழர் ஜினேந்திரபால சொன்ன கருத்துக்களுடன் ஒத்துப் போவதையும் அவதானிக்க முடியும். அதாவது தேசிய முதலாளித்துவ அரசாங்கம் ஒன்றுடனான இடதுசாரிகளின் அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதை கோடி காட்டுகிறது. எனவே இந்தக் கட்டுரையை வாசிக்கும் பொழுது, அன்றைய சூழ்நிலையையும் இன்றைய சூழ்நிலையையும் மனத்தில் இருந்தி ஒப்புவமை நோக்கில் வாசிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**– 'வானவில்' ஆசிரிய குழு**

இனி தோழர் ஜினேந்திரபாலவின் கட்டுரையை வாசியுங்கள்.

**தேசிய** முதலாளி வர்க்கம் ஆட்சி நடாத்தும் எங்கள் நாட்டிலே, இப்பொழுது தலையெடுத்துள்ள கூட்டு அரசாங்கம் நிறுவுதல் பற்றிய பேச்சுவார்த்தைகளின் காரணமாக, முன்பு எப்பொழுதும் இல்லாத அளவுக்கு தேசிய முதலாளி வர்க்கத்தின் உண்மைச் சுயரூபத்தையும் அதன் கொள்கையையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இது மிகவும் அவசியம் ஏனென்றால், இடதுசாரி ஐக்கிய முன்னணியின் இன்றைய தலைவர்கள், பரந்த ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்பி, அந்த முன்னணியின் தலைவராக இடதுசாரி முன்னணியைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தோடு அதனை அவசரப்பட்டு கொண்டு சேர்த்துவிட முனைவதாகும்.

### தேசிய முதலாளி வர்க்கம் என்றால் என்ன?

சீன நாட்டு முதலாளி வர்க்கத்தைப் பற்றி தோழர் மாஓசேதுங் செய்த விளக்கத்தைப் பார்ப்போம். மத்தியதர முதலாளி வர்க்கத்தைப் பற்றி அவர் விபரித்த பொழுது, "அவர்கள் சீனாவின் முதலாளித்துவ உற்பத்திச் சாதனங்களைப் பரிபாலிப்பவர்கள்" என்று கூறினார். மேலும் அவர் "தேசிய முதலாளித்துவ வர்க்கம் என்று கூறுவது இந்த முதலாளிகளைத்தான். அவர்களுடைய அரசியல் மேடையானது ஒரு வர்க்கத்தால் – அதாவது தேசிய முதலாளி வர்க்கத்தால் அதிகாரம் செலுத்தப்படும் இடமாகும்" என்றார். மேலும், "பெரும் முதலாளித்துவ ஸ்தாபனங்களாகவும், தனிப்பட்ட முதலாளிகளாகவும் அந்த வர்க்கம் பிரிந்துள்ளது. முன்னவை ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளிகளால் ஆக்கப்பட்டு அவர்களாலேயே வளர்த்து எடுக்கப்பட்டவை ஆகும். அவை கிராமப்புற நிலப்பிரபுத்துவ இயக்கங்களோடு பல வகைகளிலும் இணைந்து உள்ளன. சீனாவின் தேசிய முதலாளி வர்க்கம் உண்மையில் மத்தியதர முதலாளி வர்க்கமே" என்றும் கூறினார்.

முதலீடு, வர்த்தகம், பொருள் உற்பத்தி, கடன், வங்கிகள் முதலியவற்றால் அது பெருகி வாழ்கிறது. தேசிய உற்பத்தித் தொழில்கள் முன்னேறாத காரணத்தால் அடிமை நாடுகளில் வியாபாரத் துறைகளிலேயே முதலீடு செய்யப்படுகிறது. பொதுவாகப் பார்க்கும் பொழுது தேசிய முதலாளி வர்க்கம் மத்தியதர, கீழ்நிலை முதலாளிகளாலும், தேசிய உற்பத்தித் தொழில்களில் முதலீடு செய்துள்ள பணக்காரர்களாலும் ஆனது. தேசியத் தொழில்களில், தேசிய முதலாளி வர்க்கம் முதலீடு செய்துள்ளதால், நாட்டின் வியாபாரத் துறையையும் அது தன்வசப்படுத்த வேண்டியுள்ளது. ஏகாதிபத்திய பொருளாதார முறையைப் பற்றிக்கொண்டு இருப்பதால் அதனுடைய இலாபம் குறைகிறது. தேசத்தைத் தொழில்மயமாக்கத் தேசிய முதலாளித்துவம் முனைகிறது. ஆதலால் தேசியத் தொழில்களை முடங்கச் செய்ய முனையும் பிரபுத்துவத்துக்கு அவர்கள் எதிரிகள் ஆகிறார்கள். பொருளாதார அபிவிருத்திக்கு உபயோகப்படுத்தக்கூடிய இலாபத்தை அடைவதற்குத் தடையாக சொற்ப தொகையான அந்நிய தோட்டக் கம்பனிப் பிரபுத்துவ ஸ்தாபனங்கள் இருப்பது அவர்களுக்கு எதிர்ப்பை மூட்டுகிறது. சந்தைகளைப் பிறநாட்டு வியாபாரப் பொருட்கள் நிரப்பிக்கொண்டு இருப்பதால், உள்நாட்டில் குறைந்த முதலீட்டால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை இல்லாமல் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கும், பிறநாட்டுக் கம்பனிகளின் ஆதிக்கத்துக்கும், பெரும் முதலாளித்துவ ஸ்தாபனங்களுக்கும் எதிரியாகின்றது. அதனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்துள்ள தேசிய முதலாளி வர்க்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு (யூ.என்.பி) விரோதமாகின்றது.

### தேசிய முதலாளித்துவத்தின் செயல்முறை

ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகளும், பெரும் நிலச்சுவான்தார்களும் , பண முதலைகளான கம்பனிகளும் அரசாங்க அதிகாரத்தைக் கையேந்தி உள்ள நாடுகளில், தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியைத் தன்வசப்படுத்த முனைகிறது. இலங்கையில் 1956ஆம் ஆண்டில் தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒருமுறை அரசாங்கத்தைக் கைப்பற்றி, பின்பு 1960இல் சிறிது காலம் இழந்து, மீண்டும் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இப்பொழுது அந்த அதிகாரத்தைக் கைபறிய விடாமல் காப்பாற்ற அது பெரிதும் முயல்கிறது.

ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தன்னால் தனித்துச் செய்ய முடியாததால், தேசிய முதலாளி வர்க்கம் அடக்கி ஒடுக்கப்பட்ட, துன்பத்தில் உழலும் பாட்டாளி மக்களை உதவிக்கு அழைக்கிறது. அதனால் மிகவும் தாராளமாகப் பல சலுகைகளைத் தருவதாக வாக்களிக்கிறது. ஆனால் ஆட்சியைக் கைப்பற்றி விட்டால் எல்லாவற்றையும் அது மறந்துவிடும்.


படிப்பகம்

www.padippakam.com

முதலாளி வர்க்கம் வெகுஜன இயக்கத்தின் முன்னால் ஈடுகொடுக்க முடியாது. அதனால் அது அந்த வெகுஜன இயக்கத்தை ஏமாற்றித் தனக்கு ஆதரவாக வைத்துக்கொண்டு ஆட்சிபீடத்தில் தொடர்ந்து இருக்க முனைகிறது.

தேசிய முதலாளி வர்க்கத்தை நன்றாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பது, அது நிலப்பிரபுத்துவத்தைப் பற்றிக் கொண்டுள்ள கொள்கையும், நடந்து கொள்ளும் முறையுமாகும். நிலப்பிரபுத்துவம் தனது அரசியல், பொருளாதார உயர்வுகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்பதால், முதலாளித்துவம் அதனை எதிர்க்கிறது. பொதுமக்களில் பெரும் பகுதியினரான விவசாயிகளின் ஆதரவு தேசிய முதலாளித்துவம் ஆட்சிக்கு வர மிகவும் அவசியம் என்பதால், அது அவர்களுடைய ஆதரவை எப்பொழுதும் நாடுகிறது. அத்தகைய தேசிய முதலாளித்துவம் விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க வேண்டும். அல்லது தான் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு உடையது என்று காட்டும் விதத்திலாவது நடந்து கொள்ள வேண்டும். இந்த இடத்தில்தான் தேசிய முதலாளித்துவத்தின் நிலப்பிரபுத்துவக் கொள்கை வெளிப்படுகிறது. ஏனெனில் அதற்கு நஸ்டஈடு இல்லாமல் விவசாயிகளுக்கு நிலத்தின் உடமையைப் பெற்றுக் கொடுக்கவும், விளைவிக்கப்பட்ட பொருட்களின் மீது நியாயமான உரிமைகளை வழங்கவும் முடியாமல் இருக்கிறது. தனிப்பட்ட நில உடைமையின் பயன்களை தானும் அனுபவித்துக்கொண்டு இருப்பதால், அதற்கு எதிராகப் போவது தேசிய முதலாளித்துவத்திற்கு முடியாமல் இருக்கின்றது. அதனால் பெரும் தோட்டங்களையும், பெரிய நிலங்களையும் தேசியமயமாக்க முனையாமல் இருக்கிறது தேசிய முதலாளித்துவ ஆட்சி. இந்தக் காரணத்தால் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான புரட்சிக்குத் தேசிய முதலாளித்துவ ஆட்சி ஆதரவு தராது.

தேசிய முதலாளித்துவம் பொதுமக்களுக்கு ஜனநாயக உரிமைகளைக் கொடுக்கும் போதும் நிரந்தரமான முறையில் அந்த உரிமைகளை வழங்குவதில்லை. அவர்கள் ஜனநாயக உரிமைகளைப் பேசுவது பெருநிலச்சுவான்தார்களும், பெரும் பணக்காரர்களும் ஆட்சியில் இருக்கும்போது மட்டும்தான். சட்டப்படி அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க தான் போரிடுவதாகக் கூறித்தான் தேசிய முதலாளித்துவம் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்பு அந்த உரிமைகளை அது மிதித்துத் தள்ளுகிறது.

தொழிலாளி வர்க்கம் பலவீனமாக இருக்கும் பொழுது, தேசிய முதலாளி வர்க்கம் ஜனநாயகமாக நடந்து கொண்டு ஏமாற்றுகிறது. ஆனால் தொழிலாளர்களின் அரசியல் அறிவு பெருகப் பெருக ஜனநாயக உரிமைகளைச் சிறிது சிறிதாக அழிக்க முனைகிறது அரசாங்கம்.

## தேசிய முதலாளி வர்க்கத்துடன் கூட்டுச் சேருவது

தேசிய முதலாளி வர்க்கத்திடம் இத்தகைய குறைபாடுகள் இருந்தாலும், அது ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரானது என்பதால், அதனுடன் இணையலாம். ஆனால் அந்தக் கூட்டு முன்னணி தொழிலாளகள், விவசாயிகள், சிறு செல்வந்தர்கள், புத்திஜீவிகள், தேசிய முதலாளிகள் ஆகியவர்களால் ஆனதாக இருப்பதால், அதனைக்கொண்டு போராட்டம் நடாத்திவிட முடியாது. அந்த முன்னணியைச் சேர்ந்த வெகுஜனங்களை ஒன்று திரட்டி சரியான, புரட்சிகரமான முறையில் வழி நடாத்தினால் மட்டும்தான் இது சாத்தியமாகும்.

ஆதலால் எதிரிகளைத் தோற்கடிக்க இரண்டு கோரிக்கைகளை முன்னிறுத்த வேண்டும். அவை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் சாதாரண பொதுமக்களைச் சேர்த்துக் கொள்ளுவதும், ஐக்கிய முன்னணியின் உள்ளே இருக்கும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்று திரட்டிப் புரட்சிப் பாதையில் வழி நடாத்துவதும் ஆகும்.

தேசிய முதலாளி வர்க்கத்துடன் நாம் ஒன்று சேர்ந்து செயல்புரியும் பொழுது கவனத்தில் வைக்க வேண்டிய அடுத்த விடயம், ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் ஒழித்துக்கட்டும் ஜனநாயகப் புரட்சியின் இறுதிவரை ஒத்துழைக்க அது முன்வராது என்பதாகும். ஏனெனில் அந்தப் புரட்சியைத் தங்கள் வர்க்கத்தின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யும் அளவிற்கு மட்டுப்படுத்த தேசிய முதலாளித்துவம் முயல்கிறது. ஏகாதிபத்தியத்தின் பிடியை முறியடிப்பது, நிலப்பிரபுத்துவத்தை அடையாளம் இல்லாமல் அழிந்து போகச்செய்வது, ஜனநாயக உரிமைகளைப் பெறுவது ஆகியவற்றில் தேசிய முதலாளித்துவத்தின் பங்கு சொற்பமானது. ஆனாலும் மிகவும் கடினமானது. அதனால் அது புரட்சி இயக்கத்திற்குத் தீங்கு விளைவித்துக் கைவிட்டுத் தோற்கடிக்கச் செய்தாலும் செய்யலாம்.

## வெற்றிபெற வேண்டும் என்றால்

ஏகாதிபத்தியத்தின் தொடர்புகளை இந்த நாட்டிலிருந்து அகற்றி, நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து, ஜனநாயகப் புரட்சியை வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்றால், அதற்கு உண்மையில் உழைக்க வேண்டிய வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில்தான் அதைச் செய்ய முடியும். பரந்த கூட்டு முன்னணியில் தலைமை வகிக்க வேண்டியது தேசிய முதலாளி வர்க்கமோ, அதன் அரசியல் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்ல. அதனைச் செய்ய வேண்டியது தொழிலாளி வர்க்கமும், அதன் அரசியல் கட்சியான மார்க்ஸிஸ — லெனினிஸக் கொள்கைகளைப் பின்பற்றும் கம்யூனிஸ்ட் கட்சியும் தான்.

தேசிய முதலாளித்துவத்துடன் ஒன்றுபடுவதற்கு ஒரே வழி, ஒத்தழைப்போடு போராட்டத்தையும் நடத்திச் செல்வதேயாகும். தேசிய முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தோடு ஒன்றுபடும் பொழுது, அந்தப் பலத்தைக் கொண்டு வெற்றி பெறுவதோடு, தனது கொள்கைகளை மேலோங்கச் செய்து தொழிலாளி வர்க்கத்தைத் தனித்து விடவும் கூடும். அப்படிச் செய்ய முடியாமல் போகும் பொழுது, அது அந்தக் கூட்டணியின்


படிப்பகம்

www.padippakam.com

தலைமையைத் தொழிலாளர் வர்க்கத்திற்குக் கிடைக்க விடாமல் தடுத்து, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்கு எதிராகச் சதி செய்தாலும் செய்யலாம். அப்படிச் செய்யும் பொழுது ஜனநாயகப் புரட்சியைக் கைவிடுவது மட்டும் அல்ல, வேறு எது வேண்டுமென்றாலும் செய்யலாம். அதற்குக் காரணம் தேசிய முதலாளித்துவத்தின் உள்ளே இருக்கும் வலதுசாரிகளாகும்.

அதனால் அப்படிப்பட்ட கோஸ்டிகளுடன் கூட்டுச் சேர்ந்து தொடரத் தொழிலாளி வர்க்கத்திற்கு முடியாது. தேசிய முதலாளித்துவத்துடன் கூட்டுச் சேரும் பொழுது அதன் வலதுசாரிகளிடம் இருந்து ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளைப் பிரித்து வைக்க வேண்டும். தொழிலாளி வர்க்கம் தலைமையைக் கைப்பற்ற முடிவது, புரட்சி இயக்கம் பலம் பெறும் பொழுதும், பொதுமக்கள் அதிகமதிகமாகப் போராட்டங்களில் ஈடுபட்டுப் பழகும் அளவிற்கும் ஏற்றதாகவே இருக்கும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சி ஆகியவற்றின் பொழுது முதலாளி வர்க்கம் கையாளும் ஒரு தந்திரம் என்னவென்றால், சில சில சூழ்நிலைகளுக்கேற்ப, ஏகாதிபத்திய எதிர்ப்பின் முக்கியமான ஒரு அணியான கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மத்தியதரப் பணக்கார வகுப்பாரிடம் தலைமையைக் கொடுப்பதாகும். அதனால்தான் தேசிய முதலாளித்துவத்தின் தந்திரங்களையிட்டுக் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. இந்தத் தந்திரத்தை நல்லபடி புரிந்து கொண்டால் புரட்சிப் போராட்டத்தின் போது எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒரு அணியில் திரட்டித் திறமையாக வழி நடாத்த முடியும்.

தேசிய முதலாளித்துவத்தினை நன்றாகப் புரிந்து கொள்ளத் தவறினால், ஒன்றில் இடதுசாரி இயக்கத்தில் முறிவு ஏற்படவோ அல்லது வலதுசாரிகள் பிழைவிடும் பொழுது அதனால் தாக்குதல் அடையவோ நேரும். ஆதலால் தேசிய முதலாளி வர்க்கம் காட்டும் சலுகைகளையிட்டுக் கவனமாக இருக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாக தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் புரட்சிச் சக்தியை நம்பி இறங்கினால் வலதுசாரிகளிடம் மண்டியிட நேரவும் கூடும்.

## கவனமாக இருக்க வேண்டிய சூழ்நிலைகள்

வலதுசாரிகள், முற்போக்கு சக்திகள் பலம் பெறும் பொழுது அவற்றுடன் சேர்ந்து சந்தர்ப்பவாதிகளாகி விடுகிறார்கள். அந்தச் சந்தர்ப்பவாதச் செயலின் பயனாக ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணித் தலைவர்கள் முதலாளிகளிடம் சிக்கி விடுவதால் தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் வாலாக ஆகி விடுகிறது. அதன் பிரதிபலிப்பு, தொழிலாளி வர்க்கத்தைப் புரட்சிக்குத் தயார்பண்ண முடியாமல் தேசிய முதலாளித்துவத்தின் சந்தர்ப்பவாதிகளான தனி நபர்களுக்கு இரையாக்கிவிட்டுப் பகையாளியுடன் நடு வழியில் சமாதானம் செய்து கொள்வது போல் புரட்சியைப் பணயமிடுவதாக முடியும். அத்தகைய பிழையான பாதைகளில் செல்வதிலிருந்து விடுபட வேண்டும் என்றால், தொழிலாளி வர்க்கத்தை வழி நடாத்தும் தலைவர்கள் அத்தகைய ஆபத்துகளையிட்டுக் கவனமாக இருப்பதோடு, வேறு நாடுகளிலுள்ள தோழமையான கட்சிகளினதும் அனுபவங்களோடு இந்நாட்டில் நிகழ்ந்த சம்பவங்களால் பெற்ற அனுபவத்தையும் சேர்த்துக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் தேசிய முதலாளித்துவத்தின் சேவைகளைப் பற்றிக் கவனிக்காமல் பாட்டாளி வர்க்கம் எந்த வழியில் நடக்க வேண்டும் என்பதைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டும். அந்த வழியில் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஒன்றுபடுத்தி, தேசபக்த புத்திஜீவிகளுடன் சேர்த்து ஓரணியில் திரட்டி, அந்தச் சக்தியின் மூலம் தேசிய முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை விசாலப்படுத்தி, அவற்றின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டு புரட்சிக்கு வழிவகுக்க வேண்டும்.

வர்க்கங்களுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்குப் பதிலாகப் பின்வரும் ஐந்து கொள்கைகளை நாம் கட்டாயம் முன்னிறுத்திச் செயலாற்ற வேண்டும்.

1. நமது கட்சியின் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கத்தை வழி நடாத்துவது.
2. தேசிய விடுதலைப் புரட்சியைச் சோசலிஸத்தின் வழியில் செல்வதற்குரிய வாயிலாகப் புரிந்து கொள்வது.
3. தேசிய முன்னணியின் முக்கிய இயக்கமாகக் கருதி, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் தோழமையைக் கட்டி எழுப்புவது.
4. “ஐக்கியமும் போராட்டமும்” என்ற கொள்கையைக் கையாண்டு, பொதுவான கோரிக்கைகளை வென்றெடுக்க ஒற்றுமைப்பட்டு, தொழிலாளர்களுடைய உயர்வுக்கு வழி வகுப்பதற்காக போராடுவது என்ற எண்ணங்கள் உடையவர்களாக இருக்க வேண்டும்.
5. பலம் பொருந்திய தொழிலாளி வர்க்கக் கட்சி ஒன்றைக் கட்டி எழுப்பித் தத்துவரீதியாகவும், செயல்ரீதியாகவும் புரட்சிகரமாக இயங்கச் செய்வது.

ஒற்றுமைப்படும் பொழுதும் கூட்டுச் சேரும் பொழுதும் பாட்டாளி வர்க்கம் குதிரையாகவும், பணக்கார வர்க்கம் குதிரை மேல் சவாரி செய்பவனாகவும் ஆகிவிட்டால், அது ஒற்றுமையாகாது. பதிலாகப் பாட்டாளி வர்க்கத்தையும் புரட்சியையும் பணயம் வைத்ததாக முடியும். ஆகையால் வெகுஜனப் போராட்டங்களை வளர்க்க வேண்டியதோடு, அந்தப் போராட்டங்களினூடே தேசிய முதலாளித்துவத்தோடு நட்பும் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க....


படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த்திரையிசையுலகின் மைற்கல் சௌந்தரராஜன்



தமிழ்த் திரையிசையுலகில், சௌந்தரராஜனின் வகிபாகம் என்றுமே அழிக்கப்படமுடியாததும் மறக்கப்பட முடியாததுமாகும். அவரது பாடல்களை, தத்தம் வாழ்நிலைகள், சூழ்நிலைகளிற்கேற்ப முணுமுணுக்காத தமிழ் கூறும் உலகமில்லை. எந்த வகையான பாடல்களாகவிருந்தாலும், எமது விருப்பத்திற்கேப்ப, அவரின் பாட்டுக் களஞ்சியத்திலிருந்து தேர்ந்தெடுத்து முணுமுணுக்கலாம், நுகர்ந்துவிடலாம். அவை எழுச்சிப்பாடல்கள், மகிழ்ச்சிப்பாடல்கள், சோகப்பாடல்கள், விரக்திப்பாடல்கள், காதல்ப்பாடல்கள்... என நானாவிதப்பட்டவை. அவற்றை யாத்த பாடல் ஆசிரியர்களினதும், இசையமைப்பாளர்களினதும் பங்களிப்பை என்றுமே புறந்தள்ளிவிடமுடியாது. கண்ணதாசன், வாலி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோரின் வரிகளுக்கு தனது குரலென்னும் வாகனத்தால் மணமும், சுவையும் பரப்பியவர்.

சௌந்தரராஜனின் பாணி, கிட்டப்பாவை மானசீகக் குருவாகக்கொண்ட தியாகராஜபாகவதரின் பாணி. சௌந்தரராஜனை கிட்டப்பா பாணியின் கடைசி வாரிசு என்றுகூடச் சொல்லலாம். அவர், பாகவதரையே அடியொற்றியவர். பாகவதரின் படத்தில் இடம்பெற்ற அனைத்துப் பாடல்களையும் மனனம் செய்து பாடித்தள்ளிவிடுவார். அவர் மெல்லிசை, துள்ளிசை, கிராமிய இசை, பண்ணிசையென பன்முக இசைப் பரிமாணங்களையும், இசைத்தவர். பண்ணிசைப் பாடல்களில் பலவற்றை அவரே இசையமைத்துமுள்ளார். அதிலொரு முத்துத்தான் யாழ்ப்பாணத்து வீரமணிஜயர் இயற்றிய இராகமாலிகாவில் அமைந்த 'கற்பகவல்லி நின் பொற்பதங்கங்கள்'. 1976 இல் வெளிவந்த 'பலப்பரீட்சை' படத்திற்கும் இசையமைத்துள்ளார்.

1950களில் ஆரம்பித்த அவரது இசைப்பயணம், 70 களின் பிற்பகுதியில் சற்றுத்தொய்வேற்பட்டு, 80களின் இறுதிவரை தொடர்ந்தது. இவர், தந்தையாரான தொளுகுவ (T) மீனாட்சி (M) ஐயங்காருக்கு (வைஷ்ணவமத பூசகர்) பின்னால் சிறுவயதில் பஜனைப் பாடல்களைப் பாடிவந்தவர். அப்பாடல்களுக்குக் கிடைக்கும் ஓரிரு ரூபாக்களில் அகமகிழ்ந்தவர். தந்தையார் சமூகத்தின் பூர்வீகமோ குஜராத் மாநிலத்தின் அரேபியக் கடலோரப் பகுதியான கத்தியவார் (சௌராஷ்டிரம்). Gajini Mohamed மன்னனின் (கி.பி.998) படையெடுப்புக்கு அஞ்சி மதுரையில் தஞ்சமடைந்தவர்கள். அவர்களது தொழில் நெசவு நெய்தலாகவும், மொழி, 'கத்திரி' மொழியாகவும் காணப்பட்டது.

இவரது குடும்பம் பொருளாதார ரீதியில், மிகவும் பின்தங்கியது. இவரது சங்கீதப் பயிற்சிக்கான மாதக்கட்டணம் 15 ரூபாவைக்கூட கொடுக்கும் சக்தியற்றது. இவரது சௌராஷ்டிர பிரமுகர்கள் நால்வரே அக்கட்டணத்தைப் பகிர்ந்து அவரைப் பயிற்றுவித்தனர். 12 வர்ணங்களையும், 48 கீர்த்தனைகளையும், காரைக்குடி ராஜாமணி ஐயங்காரிடம் பயின்று தனக்கான அத்திவாரத்தை அமைத்துக் கொண்டவர். அப்பயிற்சியின் மூலம் பாடலுக்கான ஸ்வரஸ்தானங்களை அடையாளங் கண்டுகொண்டவர்.

## இசைப்பிரியன்

தனது 23 வது வயதில், கர்னாடக சங்கீத அரங்கேற்றத்தை நிறைவேற்றினார். சங்கீத வித்துவான் எனப் பேர் பெற்றிட ஆலாய்ப் பறந்தார். மேடைகளைத் தேடிப்பிடித்துப் பாடிக்கொண்டு திரிந்தார். இருந்தும் அதன் புகழும், வருவாயும் அவருக்குப் பெரியளவில் கைகொடுக்காமையினால் அவர், புத்திசாதுரியமாகப் பாகவதரின் பாடல்களைப்பாடி புகழேணியின் உச்சிக்குத் தாவினார். மெல்ல மெல்ல சினிமாவிற்குள் நுழைந்தார். அதுகூட அவருக்குச் சுலபமாக அமையவில்லை. முன்னையவர்கள் ஸ்ருடியோவை நிறைத்திருந்தனர். அவருக்கு முன்னாலிருந்த திருச்சி லோகநாதன், கண்டசாலா, ஏ.எம்.ராஜா, சி.எஸ்.ஜெயராமன் போன்றோரின் ஆதிக்கத்தோடு போட்டிபோடுவது அவருக்கு கல்லில் நாருரிக்கும் வேலையாயிற்று.

கோவை சென்ரல் ஸ்ருடியோவில், மாதம் 50ரூபா சம்பளத்திற்கு பணியாளராகச் சேர்ந்தார். அங்கு ஏற்கனவே பணியாற்றிக்கொண்டிருந்த, பி.யூ.சின்னப்பா, கே.ஆர்.இராமசாமி, டி.எஸ்.பாலையா, எஸ்.எம்.சுப்பையாநாயுடு, ஆகிய அக்காலத்துப் பிரபலங்களைக் கவரும் விதத்தில், அவர்களின் காதில்

www.padippakam.com

விரும்பபடியாக சின்னப்பாவின் பாடல்களைப் போகவரப் பாடிக்கொண்டு திரிந்தார். அவர்களின் பாராட்டுதல்களையும் சம்பாதித்துக்கொண்டார். வாய்ப்பும் சுப்பையாநாயுடு வாயிலாகக் கிடைத்தது. காலத்தால் அழியாத 'சிங்காரவேலனே தேவா'என்ற பாடலைத்தந்த நாயுடுவே, சௌந்தரராஜனுக்கு முதன்முதலில் சந்தர்ப்பம் கொடுத்தார். அது 1950இல் வெளிவந்த 'கிரஷ்ண விஜயம்' படத்திற்குரிய 'ராதா நீ என்னை விட்டுப்போகாதேடி' என்ற பாடலாகும். 1937இல் சிந்தாமணி படத்திற்காக பாபநாசசிவம் இசையிலமைந்த பாகவதரின் 'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி' என்ற வர்ண மெட்டையும், ராகத்தையும் (செஞ்சுருட்டி) ஒத்ததுதான் இந்தப் பாடலும்.

முல்லைமலர் மேலே, சிந்தனைசெய்மனமே, வசந்தமுல்லைப்போலே, போன்ற சாகாவரம் பெற்ற பாடல்களைத் தந்த ஜி.ராமநாதனின் இசையில் இவர் பாடிய பல பாடல்கள் உச்சஸ்தாயில் அமைந்தவை."நான் வளருவதற்கு, என்னுடைய சாரீரத்தைப் பக்குவப்படுத்துவதற்கு, நான் தைரியமா பாடிக்கிட்டிருக்கிறதுக்குக் காரணம் ஜி.ராமநாத ஐயரோட மியூசிக்தான், அவர் கொடுத்த வழிதான், நான் சிங்கம் மாதிரி பாடிக்கிட்டிருக்கேன், சாரீரத்தில் ஆண்மை வேண்டும் என்பார். அவரும் அப்படித்தான் பாடிக் காண்பிப்பார், ஸ்தாயிகளில் சஞ்சாரம் செய்து அழுத்தம் திருத்தமாக சங்கதிகள் போடற வழியை சொல்லிக் கொடுத்தது ஐயாதான்". என்றார் ரி.எம்.எஸ். இவரது உச்சஸ்தாயி சஞ்சார பலமே இவருக்கு தெலுங்குப்பட வாய்ப்பைக் கொடுத்தது. அது பிரபல தெலுங்குப்பாடகரான 'தேசுலாவுதே தேன்மலராதே' பாடலைப்பாடிய, கண்டசாலா வாயிலாகக் கிடைத்தது. கண்டசாலா, தனக்குவந்த உச்சஸ்தாயிப்பாடலை தன்னால் முடியாது ரி.எம்.எஸ் இடமே கொடுங்கள் என்று பின்வாங்கினார். இதேபோலவே 'நாடோடி மன்னன்' ஹிந்தி மொழியில் தயாரானபோது, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் செயலூக்கத்தை கூறிய 'தூங்காதே தம்பி தூங்காதே' பாடலின் சரணத்தில் வரும் குறுகிய உச்சஸ்தாயி ஆலாபனையைத் தன்னால் பாடமுடியாதென்று முகமட் ராபி கூறினார். அதனை சற்றுத்தளர்த்தி இறக்கித் தருமாறுகோரி, அதன்பின்னரே பிரபல ஹிந்தி பின்னணிப் பாடகராக அறியப்பட்ட முகமட்ராபி பாடினார். இரண்டு படங்களுக்கும் நாயுடுவே இசையமைத்திருந்தார். சௌந்தரராஜனின் 'ஓராயிரம் பாடலிலே' என்ற பாடலே ராபியை மிகவும் பாதித்தது. ஒருமுறை ராபி சௌந்தரராஜனைச் சந்திக்க நேர்ந்தபோது, அவரது தொண்டையை வருடி இதற்குள்ளிருந்தா இந்த நாதப் பிரவாகம் கிளம்புகிறது என்றார்.

ஹிந்திப் படங்களில் பாடவருமாறு அழைப்புக்கிடைத்திருந்த போதிலும் அதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. எம்.எஸ்.விஸ்வநாதன் ஒருமுறை, தானொரு ஏகலைவன் என்றும், ஒருவரை தனது துரோணர் என்றும் வர்ணித்திருந்தார். அவர் வேறுயாருமில்லை, பிரபல ஹிந்தி இசையமைப்பாளர் நௌஷாத். அவரிடமிருந்தே அத்தகைய அழைப்பு வந்தது. 'சௌந்தரராஜனின் பாடலில்தான் தமிழ் சிறப்புப்பெறுகிறது'. என்றார் எம்.எஸ்.வி. அவரது தமிழ் உச்சரிப்பிற்கு 'முத்தைத்தரு பத்தித் திருநகை' என்ற திருப்புகழ் சிறந்த எடுத்துக்காட்டு. அதற்கான பொருள் விளக்கத்தை கிருபானந்தவாரியாரிடம் கேட்டுத் தெரிந்தே பாடியதாகவும் தகவல். சௌந்தரராஜன், தமிழ் தெலுங்கு மலையாளமென 10000 இற்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இதில் சிங்களமொழிப் பாடலொன்றும் அடக்கம்.

சிவாஜி கணேசன், தனது முதல் படமான பராசக்தியில் –1952, பாடிய சி.எஸ்.ஜெயராமனையே பெரிதும் விரும்பியதால், புதுப்பின்னணிப் பாடகராக வந்த சௌந்தரராஜனை, ஆரம்பத்தில் ஏற்க மறுத்தார். 'தூக்குத்தூக்கி' (1954) படத்தில் பாடுவதற்கான வாய்ப்பு திருச்சிலோகநாதனின் ஊதியப் பிரச்சனையால் இவருக்கு கிட்டியது. லோகநாதன் இந்தப்படத்திற்கான ஒவ்வொருபாடல்களுக்கும் தலா 500 ரூபாவீதம் கேட்டிருந்தார். தயாரிப்பாளரின் பேரம்பேசலுக்கு இணங்கமறுத்த இவர், உங்களது கட்டணத்திற்கு புதிதாக வந்துள்ள மதுரைப்பாடகரைக் கேட்டுப்பாருங்கள் என்று கூறினார். இதனால் சௌந்தரராஜனைத் தேடிவந்தது அதிஷ்டம். ஆனால், சிவாஜி கணேசனோ சி.எஸ்.ஜெயராமனை எனக்காகப் பாடவைக்காமல் யார், யாரையோ எல்லாம் கொண்டுவருகிறீர்களே என்று ஆரம்பத்தில் முகம் சுழித்தார். ஆனால் இசையமைப்பாளரான ஜி.இராமநாதன், சௌந்தரராஜனை சிறந்தபாடகர் என்று உத்தரவாதம் செய்தார். சௌந்தரராஜனும் "மூன்று பாடல்கள் பாடுகிறேன் கேட்டுப்பாருங்கள், உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நான் வீடேகிறேன்". என்று சலிப்போடு கூறினார். பின்னர், அவரது பாடல்கள் சிவாஜிகணேசனை மிகவும் கவர்ந்துவிடவே இந்தப்படத்தில் இடம்பெற்ற அத்தனை பாடல்களையும் சௌந்தரராஜனையே பாடும்படி கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு பாடல்களுக்கும் தலா 250ரூபாவீதம் பெற்றுக்கொண்டதையும், வாய்ப்பையும் பெரும்பேறாக எடுத்துக்கொண்டார் சௌந்தரராஜன்.

சௌந்தரராஜன், பட்டினத்தார் (1962), அருணகிரிநாதர் (1964), கல்லுங்கனியாகும் (1968), போன்ற ஒருசில படங்களிலும் பாடி நடித்துள்ளார். இசை நாடகத்தின் தாக்கம் காரணமாக அக்காலங்களில் பாடகர்களே நடிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இவருக்குப்பின் பாடி நடித்தவர்கள் இல்லையென்று சொல்லலாம். 1940களின் பிற்பகுதிகளிலேயே பின்னணிப்பாடல் முறை அறிமுகமாகியது. 1948இல் ராஜமுக்தி படத்தில் வி.என். ஜானகிக்கு எம்.எல்.வசந்தகுமாரி முதன்முதலில் பின்னணி பாடினார். இதற்கு அக்காலங்களில் வந்த நடிகர்களுக்குப் பாடும் ஆற்றல் இல்லாததும் ஒரு காரணமாகும். தமிழ் சினிமாவை ஆட்டிப்படைத்த எம்.ஜி.ஆர், சிவாஜி போன்ற துருவ நட்சத்திரங்களும் பாடும் ஆற்றல் இல்லாதவர்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜியிலிருந்து கமல்ஹாசன், ரஜினிகாந்


படிப்பகம்

www.padippakam.com

வரைக்கும் சௌந்தரராஜன் பாடியுள்ளார். அவர், தனது பாடலில் நடிப்பைப் பாய்ச்சியவர். சிவாஜியின் மிகையான நடிப்பிற்கு, இவரது குரல்மூலமான உணர்ச்சிகளே மிகவும் ஒத்திசைந்தது. எங்கே நிம்மதி, அந்தநாள் ஞாபகம் 'நெஞ்சிலே வந்ததே', 'யாருக்காக இது யாருக்காக', 'பாலூட்டி வளர்த்த கிளி பழங்கொடுத்துப் பார்த்தகிளி', போன்ற பாடல்காட்சிகளைப் பார்க்கும்போது இவ்வாறான எண்ணம் தோன்றுகிறது.

'அந்தநாள் ஞாபகம்' பாடல் காட்சியில் வரும், மூச்சிரைத்தலுக்காக, ஸ்ரூடியோவை இருமுறை ஓடி வலம்வந்த பின்னரே பாடியதாகச் சொல்லப்படுகிறது. பெரும்பான்மையான பாடல்கள், பாடல் முதலிலிலும் காட்சி பின்னருமே பதிவு செய்யப்படும். ஆனால் 'பாலூட்டி வளர்த்த கிளி' இதற்கு விதிவிலக்கு. முதலில் எம்.எஸ்.வி பாடிக் காட்சியும் பதிவுசெய்த பின்னர், எம்.எஸ்.வி.இன் திருப்தியின்மையால், அக்காட்சிக்கான பாடலை ரி.எம்.எஸ்ஸைக் கொண்டு பாடுவித்தார். அதன் மூலம் பாடலும் வெற்றியடைந்தது. படமும் (கௌரவம்) வெற்றியடைந்தது. ஒரு முறை சிவாஜி, சௌந்தரராஜன் தனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றார். சிவாஜி, "பாகவதர் வந்து பாடிவிட்டுப் போய்விட்டாரா?" என்று செல்லமாக ரி.எம்.எஸ்ஸை அழைப்பாராம்.

சௌந்தரராஜன், பாடல்களில் உணர்ச்சிப் பிழம்புகளை ஏற்றிப்பாடினாலும், அவரின் குரலில் வாழும் கம்பீரமும், ஆண்மையும், நிறைவான சக்தியும், கனிவான, மெருதுவான பாவங்களுக்கு இடம் கொடுப்பதில்லை. அவ்வாறான பாவங்களை அவருக்குப் பின்னால் வந்த ஜேசுதாஸ், பாலசுப்பிரமணியம், ஜெயச்சந்திரன் ஹரிகரன், உன்னிக்கிருஷ்ணன், உன்னிமேனன், பழைய ஸ்ரீனிவாஸ், புதிய ஸ்ரீனிவாஸ், சங்கர்மகாதேவன் போன்றோரிடம் நிறையவே நுகரலாம். இரண்டாம் தடவை எடுக்கும் பாடல் வரிகளில்கூட இவர்கள் வைக்கும் பாவங்களும், சங்கதிகளும் சௌந்தரராஜனிடம் கிடைக்காமல் போனது சற்று ஏமாற்றமே. சீர்காழியோடு சேர்ந்து பாடிய பல பாடல்களிலும் இதனை அவதானிக்கலாம்.

இரவும் நிலவும் வளரட்டுமே..., யார் அந்த நிலவு..., முத்துக்களோ கண்கள் ..., அன்புள்ள மான்விழியே..., சந்ரோதயம் ஒரு பெண்ணானது..., எண்ணப் பறவை சிறகடித்து..., ஓராயிரம் பாடலிலே...,நான் மலரோடு தனியாக..., நான் பேச நினைப்பதெல்லாம் ..., மலர்ந்தும் மலராத..., அமைதியான நதியினிலே..., ஏரிக்கரையின்மேலே..., மாசில்லா நிலவே நம் காதலை மகிழ்வோடு..., சிந்தனை செய் மனமே..., இசைகேட்டால் புவி அசைந்தாடும் ..., சித்திரம் பேசுதடி...., சுந்தரி சௌந்தரி...., முத்துக் குளிக்க வாரீகளா..., ஆகாயப் பந்தலிலே..., தாழையாம் பூ முடித்து...

இவை என்னைக் கவர்ந்தவை. கேட்டுப்பாருங்கள். சிலவேளைகளில் உங்களையும் கவரலாம். இவரது இசை வெள்ளம் என்றும் நதியாக ஓடும். எம் இளநெஞ்சம் படகாக ஆடும்.

உசாத்துணையாக பயன்பட்டவை:
– வாமணனின் திரையிசை அலைகள்
– இணையத்தளங்கள்

*

8ம் பக்கத்தொடர்ச்சி....

**எல்லாவற்றிற்கும் மேலாக பாட்டாளி வர்க்கத்திற்கு முதலாளித்துவ ஜனநாயகக் கருத்துகளுக்குப் பதிலாகச் சோசலிஸக் கருத்துகளை ஊட்ட வேண்டும்.**

**பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தின் மருத்துவச்சி ஆகக்கூடாது. முதலாளித்துவ அமைப்புக்கு எதிராகப் போராடாமல், வேலை நிறுத்தங்களைத் தேசத் துரோகம் என்று குற்றஞ்சாட்டி, புரட்சி என்பதை வேடிக்கையாக்கி, முதலாளித்துவத்தின் பாதுகாவலர்களாக நடந்து கொள்ளாமல், நமது வர்க்கத்தின் கோரிக்கைகளைச் சிறிது சிறிதாக வென்று எடுப்பதற்காக நமக்குக் கைவந்த போராட்ட முறைகளைப் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பாட்டாளி வர்க்கத்தில் உள்ள புரட்சி மனம் படைத்த கம்யூனிஸ்ட்டுகளை இழக்க வேண்டி நேரும். அத்தோடு பாட்டாளிகள் மனத்திலும் புரட்சி பற்றிய எண்ணங்கள் மறந்து விடவும் கூடும்.**

**ஜனநாயகப் புரட்சி பற்றிப் பேசும் தற்காலத்தில், ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராகப் புரட்சி நடத்த வேண்டும் என்பதை மனத்தில் இருத்திக் கொண்டுதான், தேசிய முதலாளித்துவத்துடன் கூட்டுச் சேர்வது பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் வலதுசாரிகளின் சந்தர்ப்பவாதத்திலிருந்து மீள முடியும்.**

***தமிழில்: கி.இராமமூர்த்தி***

## தேமதுரத் தமிழோசை!
## http://tamil.cri.cn/

*சீனாவில் இயங்கும் தமிழ் வானொலியின் அதிகாரபூர்வ இணையத்தளம் இது. ஆனால், வானொலி சேவைகளைத் தாண்டி சீனாவின் வரலாறு, அங்கு வாழும் பல தேசிய இனங்களின் வரலாறு, வாழ்க்கை முறை, சீன அரசின் அன்றாட அறிவிப்புகள் என அனைத்து வகையான தகவல்களும் தமிழில் வாசிக்கக் கிடைக்கின்றன. சீனாவில் வாழும் தமிழ்க் குடும்பங்களின் பேட்டிகளையும் படிக்கலாம். தமிழ் வழியே சீன மொழியைக் கற்றுக் கொள்ளவும் முடியும். முடிந்த வரையிலும் ஆங்கிலக் கலப்பில்லாத தமிழில் அனைத்துச் செய்திகளையும் வலையேற்றி இருப்பது சிறப்பு. எங்கோ இருக்கும் சீனாவில் இருந்து இவ்வளவு தரத்துடன் ஒரு தமிழ் இணையத்தளம் இயங்குவது ஆச்சரியமானது.*

*நன்றி : ஆனந்தவிகடன்*


படிப்பகம்

www.padippakam.com

# 13ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவால் இலங்கை மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டதா?

இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தம் பற்றிய சர்ச்சைகள் தற்போது நாட்டின் அரசியல் கட்சிகளிடையே சூடு பிடித்துள்ளது. இலங்கை அரச படைகளுக்கும் தமிழ் போராளி குழுக்களுக்கும் இடையே யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்து, அப்போதைய (1987) ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு தமிழ் போராளிக் குழுக்களை அழித்தொழிக்கக்கூடிய ஒரு நிலை உருவான போதுதான், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் அதில் தலையிட்டது.




இந்தத் தலையீட்டுக்கான காரணம் மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. ஒன்று, இலங்கை அரச படைகள் தமிழ் போராளிக் குழுக்களை முற்றிலுமாகப் போர்க்களத்தில் தோற்கடித்து அழித்துவிடாதபடி பாதுகாப்பது. ஏனெனில் சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் தாயாரும், முன்னர் இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்தவருமான இந்திராகாந்தி தான் இலங்கையில் உருவான தமிழ் போராளிக் குழுக்களுக்கு இந்திய மண்ணில் ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும், பாதுகாப்பும் வழங்கி வளர்த்துவிட்டவர். அவர் என்ன நோக்கத்துக்காக (ஜே.ஆரின் அமெரிக்கச் சார்பு காரணமாக) இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் போராளிக் குழுக்களை வளர்த்து விட்டாரோ, அந்த ஜே.ஆர் அரசு அப்போராளிக் குழுக்களை அழிக்க விடுவதற்கு ராஜீவ் விரும்பவில்லை.

இரண்டாவது, அப்போராளிக் குழுக்களை அழிவிலிருந்து இந்திய அரசு பாதுகாத்தாலும், அவர்கள் தொடர்ந்தும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவதையோ, அதன் மூலமாக அரசியல் ரீதியாக இந்தியாவுக்குத் தொல்லை தரும் தனிநாடு ஒன்றை இலங்கையில் உருவாக்குவதையோ இந்திய அரசு விரும்பவில்லை. எனவே போராளிக் குழுக்களை ஆயுதப் போராட்டத்தைக் கைவிடச் செய்து, இலங்கை அரசுடன் ஒரு சமரசத்துக்குப் போக வைக்க இந்தியா விரும்பியது.

மூன்றாவது, தமிழ் போராளிக் குழுக்களை ஆயுதப் போராட்டத்தையும், தமிழீழக் கோரிக்கையையும் கைவிடச் செய்தாலும், என்ன நோக்கத்துக்காக அப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் ஒரு பகுதியைத் தன்னும் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என இந்தியா விரும்பியது. அதாவது தனிநாட்டுக்குப் பதிலாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு அதிகாரப் பகிர்வை இலங்கை அரசு மூலம் வழங்க வைக்க வேண்டும் என இந்தியா விரும்பியது.

இந்த நோக்கங்களை அடிப்படையாக வைத்தே இந்தியா இலங்கையுடன் இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. அந்த ஏற்பாட்டைச் செய்யும் பொழுது, சிங்கள இனவாதிகளால் வரக்கூடிய எதிர்ப்புகளைச் சமாளிக்கும் பொருட்டு, வடக்கு கிழக்கிற்கு மட்டுமின்றி, இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டது. இந்த மாகாணசபை முறைமை தமிழரசுக்கட்சி கோரி வந்த சமஸ்டி முறை அளவுக்கோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சி கோரி வந்த பிராந்திய சுயாட்சி முறை அளவுக்கோ ஏற்ற அளவு அதிகாரப் பகிர்வைக் கொண்டிராத போதிலும், பூரண அதிகாரப் பகிர்வுக்கான முதல்படியாக அமைந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த 13ஆவது திருத்தம் இலங்கை மீது இந்தியாவால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டது என, இன்று சிங்கள இனவாதிகள் மட்டுமின்றி, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள்


படிப்பகம்

www.padippakam.com

சொல்வதில் ஓரளவு உண்மையில்லாமலும் இல்லை. இந்திய – இலங்கை ஒப்பந்தம் உருவான போதே, ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் பிரதமர் ஆர்.பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி உட்பட பல ஐ.தே.க தலைவர்கள் அதைத் தீவிரமாக எதிர்த்தனர். அதுமட்டுமல்லாமல் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ரோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி என்பனவும் கடுமையாக எதிர்த்தன. ஜே.வி.பி ஐ.தே.க அரசுக்கெதிராக ஆயுதக் கிளர்ச்சியிலும் ஈடுபட்டது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பின் போது, இலங்கை சிப்பாய் ஒருவன் தனது துப்பாக்கிப் பிடியால் ராஜீவைத் தாக்கிக் கொலை செய்யவும் முயன்றான். எனவே அப்பொழுதே இந்த 13ஆவது திருத்தத்துக்கு சிங்கள அரசியல் சக்திகளின் ஒரு கணிசமான பிரிவினரிடையே எதிர்ப்பு இருந்தது என்பது உண்மையே.

மறுபக்கத்தில் இந்த ஒப்பந்தம் காரணமாக புலிகளைத் தவிர ஏனைய தமிழ் போராளிக் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, ஆயுதங்களை ஒப்படைத்த போதிலும், புலிகள் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்ததுடன், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கிய அந்த ஒப்பந்தத்தை எதிர்த்த பிரேமதாசவுடன் இணைந்து இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் போர் செய்ததுடன், இந்திய அமைதிப்படையை பிரேமதாச அரசின் மூலம் இலங்கையிலிருந்து வெளியேற்றி, ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையையும் கலைக்க வைத்தனர். பின்னர் அவர்கள் பிரேமதாச அரசு உட்பட அதன் பின் வந்த எல்லா அரசுகளுடனும் யுத்தம் புரிந்து, கடைசியாக மகிந்த ராஜபக்ஸ ஆட்சிக் காலத்தில் 2009இல் முற்றுமுழுதாக அழிந்தும் போயினர்.

13ஆவது திருத்தத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது என்று சொல்பவர்கள், ஏன் அந்த நிலை உருவானது என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்பட வேண்டிய தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு, ஜே.ஆர். அரசு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண முற்பட்டதே, தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்கவும், இந்தியா அதில் தலையிடவுமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. அத்துடன் அமெரிக்க – சோவியத் பனிப்போர் நிலவிய அந்தக் காலகட்டத்தில், இந்தியா சோவியத் யூனியனின் ஒரு நெருங்கிய நட்பு நாடாக இருந்த சூழலில், பிரசித்தி பெற்ற அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவுக்கு விரோதமாக இலங்கையை அமெரிக்க நவ காலனியாக எடுத்த முயற்சியே நிலைமையைச் சிக்கலாக்கியது.

ஆனால் ராஜீவ்காந்தி மேற்கொண்ட நடவடிக்கைகள் இலங்கை மீது ஓரளவு நிர்ப்பந்தம் செலுத்தியதாக இருந்தாலும், மறுபக்கத்தில் தமிழ் போராளிக் குழுக்கள் இந்திய ஆதரவுடன் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்தி இலங்கையில் தமிழர்களுக்கென்று ஒரு தனிநாட்டை உருவாக்குவதைத் தடுத்தது. உண்மையில் இந்த நிலைமையை உருவாக்கிய ராஜீவ் காந்திக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதுடன், அவரது அணுகுமுறையைப் பற்றிப் பிடித்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். இலங்கை அவ்வாறு செய்திருந்தால், இலங்கையில் அதன் பின்னர் தொடர்ந்த கொடூர யுத்தத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். புலிகளும் 20 ஆண்டுகளுக்கு முன்னரே செயல் இழந்து போயிருப்பர்.

ஆனால் இப்பொழுது 13ஆவது திருத்தத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது எனச் சொல்பவர்கள் கடந்த 26 வருடங்களாக அதை ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அந்தத் திருத்தத்தை கொண்டு வந்தபோது எதிர்த்த ஐ.தே.கவின் ஒரு பிரிவினர், சிறீ.ல.சு.க, ஜே.வி.பி என்பன கடந்த 26 ஆண்டுகளாக மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு, முதலமைச்சர், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பதவிகளையும், அவற்றுக்கான சம்பளம், சலுகைகள் என்பவற்றையும் தாராளமாக அனுபவித்து வந்துள்ளனர்.

அப்படியெல்லாம் செய்துவிட்டு, வட மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தப்பட இருக்கும் வேளையில் மட்டும் 13ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என ஒரு சாராரும், அந்த சட்ட மூலத்தையே முற்றுமுழுதாக இல்லாமல் செய்ய வேண்டும் என ஒரு சாராரும் கூச்சல் போடுவதின் காரணம் என்ன? அவர்கள் கூறுவதின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு வட மாகாணசபைத் தேர்தலை நடாத்தினால், அதைக் கைப்பற்றக்கூடிய நிலையில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வட மாகாணத்தை தனி நாடாக்கி விடும் என்ற வாதம் உண்மையானதா? இலங்கை அரசின் சட்ட திட்டங்களையும், இராணுவ பலத்தையும் மீறி வடக்கில் பெறும் ஒரு தேர்தல் வெற்றியை வைத்துக்கொண்டு தனி நாடொன்றை அமைக்கும் பலம் வெறும் வாய்ச்சவடால்காரர்களான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்பது சிறு குழந்தைக்குக்கூடத் தெரியும்.

அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காணுமாக இருந்தால், வட மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்ற பேச்சுக்கேகூட இடமில்லை. அப்படியிருக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தை தனிநாடாக்கி விடும் என்ற சிங்கள இனவாத சக்திகளின்


படிப்பகம்

www.padippakam.com

பிரச்சாரம் போலியானது மட்டுமின்றி, விசமத்தனமானதும்கூட.

உண்மை என்னவெனில், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் எண்ணம் இன்றைய அரசுக்கோ அல்லது ஐ.தே.க, ஜே.வி.பி என்பனவற்றுக்கோ இல்லை என்பதுதான் யதார்த்தமான நிலைமை. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது 2000ஆம் ஆண்டில் மாகாணசபை முறைமைக்குப் பதிலாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார். அது 13ஆவது திருத்தச் சட்டத்தையும்விட கூடுதலான அதிகாரங்களைத் தமிழ் மக்களுக்கு வழங்கியது. ஒற்றையாட்சி முறையை ஒழித்தது. அதையும் ஐ.தே.க, ஜே.வி.பி என்பன நடைமுறைப்படுத்த விடாது தமிழ்த் தலைமையின் உதவியுடன் முறியடித்தன என்பது வரலாறு.

இன்று 13ஆவது திருத்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் எனச் சொல்கிற மகிந்த அரசு, சந்திரிகா செய்ததுபோல, ஏற்கக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைத்துவிட்டு, 13ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு மக்களிடம் அனுமதி கோரினால் அதில் நியாயம் இருக்கும். அதை விடுத்து ஒன்றையும் முன்வைக்காமல், இருக்கிறதையும் இல்லாமல் செய்ய அரசு எடுக்கும் முயற்சி, தமிழ் மக்களை இந்த நாட்டின் பிரஜைகள் என அரசு ஏற்றுக் கொள்ளாததிற்குச் சமம்.

சுதந்திரத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றுமே தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை மறுத்து வந்தது போல, மகிந்த அரசும் அதே தவறைச் செய்யுமாக இருந்தால், இலங்கை இதுவரை காலமும் எதிர்நோக்கிய நெருக்கடிகளைவிட, மோசமான ஒரு நெருக்கடியை எதிர்காலத்தில் எதிர்நோக்கும் நிலை ஏற்படலாம். அப்படி நிகழாமல் மகிந்த அரசு தடுக்குமா என்பதில்தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

**- களனிப்பிரியன்**

(13ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா? அப்படிச் செய்வதானால் என்ன வகையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்? தமிழ் தலைமை உண்மையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கின்றதா? போன்ற விடயங்கள் குறித்து அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்) *

---

**'இயற்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் அல்லது மனித வரலாற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் அல்லது நமது அறிவு செய்யும் வேலைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எதைப் பார்த்தாலும் நம் முன்னே தெரியும் முதல் காட்சி என்ன? பரஸ்பர உறவுகளும் வினைத் தொடர்புகளும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டும் சர்வ வியாபகமான ஒரு வலைப் பின்னலைப் போன்றதொரு காட்சிதான் முதலில் தெரியும். இந்தப் பரஸ்பர உறவுகள் வினைத் தொடர்புகள் எதுவும் முன்னிருந்த உருவத்திலோ, முன்னிருந்த இடத்திலோ ஒரு பொழுதும் இருப்பதில்லை. எல்லாம் இயங்கிக்கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கின்றன. எல்லாம் தோன்றிக்கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கின்றன.'**

**– டூரிங்குக்கு மறுப்பு என்னும் நூலில் எங்கெல்ஸ்**

---

முன்பக்கத்தொடர்ச்சி...

வெளியேறி விடுவேன் என்ற அமைச்சர் வாசுதேவ நாணயக்கார விடுத்த எச்சரிக்கையும், சமீபத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, 'அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு அதன் நடவடிக்கைகளுக்கு குழிபறிப்பவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறி விடுவது நல்லது' என விடுத்த அறிவித்தலும் ஆகும். இடதுசாரிக் கட்சிகள் இன்று பலவீனமான நிலையில் இருப்பதால், அவை வெளியேறினாலும் அரசாங்கத்திற்குப் பாதிப்பு ஏற்படாது என சிங்களப் பேரினவாத சக்திகளும், ஏன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள கடந்தகால வரலாறு அறியாத சிலரும் கருதலாம். அப்படி அவர்கள் கருதினால், அது அவர்களது அறியாமையும், முட்டாள்தனமும் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனெனில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பது தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியாக ஆரம்பிக்கப்பட்டதால், அதற்கு உள்நாட்டுப் பெரும் முதலாளிகளினதோ அல்லது வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளினதோ ஆதரவு இருந்தது இல்லை. அதேநேரத்தில் அதனால் தனித்து நின்று ஆட்சியைக் கைப்பற்றவும் இயலாது என்பதுடன், அப்படிக் கைப்பற்றினாலும் அதைப் பாதுகாத்து நீடித்து ஆட்சி செய்யவும் முடியாது.

அக்கட்சி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் முதன்முதலாக 1956இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது, பிலிப் குணவர்த்தனவின் மகாஜன எக்ஸத் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னணி)வுடன் கூட்டுச் சேர்ந்தே ஆட்சியைக் கைப்பற்றியது. பின்னர் ஒருமுறை 1960இல் முதல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. ஆனால் அத்தேர்தலில் எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பின்னர் அவ்வாண்டு இரண்டாவது முறையாகப் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டபோது, சிறீலங்கா சுதந்திரக் கட்சி மிகச்சொற்ப பெரும்பான்மையுடனேயே வெற்றி பெற்றது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத அது பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டது. அப்படியிருந்தும் 1964இல் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை அரசுடைமையாக்கும் மசோதாவை அது கொண்டு வந்தபோது, ஐ.தே.கவும் சிறீ.ல.சு.கவிலிருந்த வலதுசாரிகளும் இணைந்து அம்மசோதாவைத் தோற்கடித்து, அரசாங்கத்தைப் பதவி இழக்க வைத்தனர்.

பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளின் உதவியுடனேயே வெற்றிபெற்று வந்துள்ளது. அதாவது தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிறீ.ல.சு.கட்சி, தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இடதுசாரிக் கட்சிகளின்


படிப்பகம்

www.padippakam.com

உதவியுடனேயே வெற்றிபெற்று வந்துள்ளது. இடதுசாரிக் கட்சிகளின் உதவி இல்லாமல் அதனால் வெற்றிபெற முடியாது என்பதற்கு வரலாற்றில் மிகச் சிறந்த உதாரணம் ஒன்று உண்டு.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான 1970 – 77 காலகட்ட ஆட்சியின் போது ஏற்பட்ட உணவு நெருக்கடியின் போது, அரசின் பங்காளிகளான இடதுசாரிக் கட்சிகள் உணவில் நாடு சுயசார்பில் நிற்பதற்கான வழிவகைகளை முன்வைத்திருந்தனர். முதலில் அதை ஏற்று நடைமுறைப்படுத்திய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க, பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, அனுர பண்டாரநாயக்க போன்ற வலதுசாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு இடதுசாரிகளின் ஆலோசனைகளைப் புறம் தள்ளினார்.

அதனால் சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரதான அணியும் அரசிலிருந்து விலகிக் கொண்டனர். இந்த நிலைமையில் 1977 பொதுத் தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலில் சிறீல.சு.க தனியாகவும், இடதுசாரிக் கட்சிகள் சோசலிச முன்னணி என்ற பெயரில் இன்னொரு அணியாகவும் பிரிந்து தேர்தலை எதிர்கொண்டனர். அதன் காரணமாக ஐ.தே.க இத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்றது. சிறீல.சு.கவுக்கு ஆக எட்டே எட்டு ஆசனங்களே கிடைத்தன. இடதுசாரிகளுக்கு வரலாற்றில் முதல் தடவையாக ஒரு ஆசனம்கூடக் கிடைக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்கள் பெற்று நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக வந்தது!

இவ்வளவிற்கும் ஐ.தே.க பெற்ற மொத்த வாக்குகள் ஏறத்தாழ 31 இலட்சம். சிறீல.சு.க பெற்றது 24 இலட்சம் வரை. சோசலிச முன்னணி பெற்றது கிட்டத்தட்ட 5 இலட்சம். தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றது ஏறத்தாழ மூன்றரை இலட்சம்.

சிறீல.சு.கவும் சோசலிச முன்னணியும் எடுத்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால், மொத்தம் 29 இலட்சம். அவர்களைவிட ஐ.தே.க எடுத்த வாக்குகள் 2 இலட்சம் மட்டுமே கூடுதலானது. ஆனால் சிறீல.சு.கவும் இடதுசாரிகளும் பிரிந்து நின்று போட்டியிட்டதாலும், அப்பொழுது விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை இல்லாமல் இருந்ததாலும், ஐ.தே.க ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்ற, சுதந்திரக் கட்சியினரும் இடதுசாரிகளும் படுதோல்வி அடைந்தனர். இடதுசாரிகளைவிட ஒன்றரை இலட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்கள் பெற்று நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக வந்தது!

சிறீல.சு.கவும் இடதுசாரிகளும் பிரிந்து நின்றால் என்ன நடக்கும் என்பதற்கு, இரு பகுதியினருக்கும் 1977 பொதுத் தேர்தல் நல்லதொரு படிப்பினையாக அமைந்தது. அதன் பின்னர் அவ்விரு கட்சியினரும் முரண்பட்டு நில்லாது ஒன்றுபட்டு நின்றதாலேயே எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிபெற்று வந்துள்ளனர். எனவே வரலாற்றைத் தெரிந்தவர்கள் எவரும் இடதுசாரிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பீடும் தவறைச் செய்யமாட்டார்கள்.

ஏன் இதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறவேண்டி இருக்கிறது என்றால், தற்பொழுதும் அவ்வாறானதொரு நிலை அரசாங்கத்திற்குள்ளே உருவாகியுள்ளது. அதாவது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிங்கள இனவாதக் கட்சிகளும், சிறீல.சு.கவிலுள்ள ஒரு குறிப்பிட்ட வலதுசாரிப் பிரிவினரும், சிறீல.சு.கவுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்து ஒரு மோதலை உருவாக்கி, இடதுசாரிகளை அரசிலிருந்து வெளியேற்றப் பார்க்கின்றனர். இது இன்றைய அரசாங்கத்தின் இருப்புக்கும், நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல.

1977 பொதுத் தேர்தலின்போது ஏற்பட்டது போன்ற ஒரு பிளவு நிலை ஏற்படுமாக இருந்தால், இன்றைய அரசாங்கத்தைக் கவிழ்த்து நாட்டில் ஒரு வலதுசாரிப் பிற்போக்கு அரசாங்கத்தைக் கொண்டு வருவதற்கு பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்கும், வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அது பெரும் வாய்ப்பாக அமைந்துவிடும். அதுவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை தற்பொழுது நடைமுறையில் இருப்பதால், சிறீ.ல.சு.க தன்னால் திரட்டக்கூடிய அனைத்து நட்புச் சக்திகளையும் ஓரணியில் திரட்டுவதன் மூலம் மட்டுமே எதிர்காலத் தேர்தல்களிலும் வெற்றிபெற முடியும். ஜனாதிபதித் தேர்தல் என்றாலும் சரி, பாராளுமன்றத் தேர்தல் என்றாலும் சரி, இடதுசாரிகளினதும் சிறுபான்மைத் தேசிய இனங்களினதும் ஆதரவு இல்லாமல் சிறீ.ல.சு.கவினால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்பதே கள யதார்த்தமாகும்.

எனவே இன்றைய அரச தலைமை அரசாங்கத்திற்குள் உள்ள இனவாத, வலதுசாரி சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல், தேசியப் பிரச்சினைகளுக்கு ஜனநாயக, பன்மைத்துவ அடிப்படையில் தீர்வுகாண முன்வருவதன் மூலம், இடதுசாரிகளின் ஆதவைத் தொடர்ந்தும் பேண வேண்டும். அதேவேளை இடதுசாரிக் கட்சிகளும் நாட்டு நலனையும் எதிர்காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு விட்டுக் கொடுப்பகளுடனும், தூரதிருஸ்டியுடனும் செயற்பட்டு ஐக்கியத்தைப் பேண வேண்டும்.

"ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பதை, எப்பொழுதும் நினைவில் கொள்வது முற்போக்கு – ஜனநாயக சக்திகளின் கடமையாகும். *

**'மனிதர்களின் வாழ்க்கை நிலைமைகளை விளக்கவேண்டுமென்றால் ஏழைகள் ஏன் இருக்கிறார்கள், பணக்காரர்கள் ஏன் இருக்கிறார்கள் என்பதை நாம் பரிசீலித்து நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.'**
**– ஜோர்ஜ் பொலிட்ஸர்**

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# தமிழக மீனவர் சங்கத் தலைவரின் இந்த வாதம் எப்படி இருக்கிறது?

"முதலில் ஒரு விடயத்தை உடைத்துப் பேச வேண்டும். 'எல்லை தாண்டி மீன் பிடிக்கிறார்கள்' என்பதுதான் இலங்கைக் கடற்படை நம்மவர்களைச் சுடுவதற்குச் சொல்லும் காரணம். இது உண்மையா என்றால், ஆம்... உண்மைதான். எல்லை தாண்டித்தான் மீன் பிடிக்கிறோம். ஆனால், அப்படித் தாண்டாமல் தொழில் செய்ய முடியாது. இந்தப் பக்கம் எனக்கு, அந்தப் பக்கம் உனக்கு' எனக் கோடு போட்டுக் கொள்வதற்கு கடல் ஒன்றும் கிரிக்கெட் மைதானம் அல்ல. அது எல்லையற்ற பரப்பு. அதில் தனக்கான உணவைத் தேடி மீனவன் வலை போடுகிறான். இங்கு இல்லை என்றால் அடுத்த இடம்....எனக் கடலில் மீனவனின் வேட்டை நகர்ந்து கொண்டே இருக்கும். ஒரு கடல் பழங்குடி என்ற வகையில் காலம் காலமாக மீனவர்களின் வேட்டைத் தொழில் இப்படித்தான் இருக்கும். திடீரென தேச எல்லைகளைப் பிரித்துக்கொண்டு அந்தப் பக்கம் போகாதே, இந்தப் பக்கம் போகாதே என்றால், கடலில் தொழில் செய்ய முடியாது. எங்கு மீன் இருக்கிறதோ, அங்குதான் வலை போட முடியும். மீன் இல்லாத இடத்தில் வலை போட்டு, வெறுங்கையோடு கரை திரும்ப முடியுமா? இந்த உண்மையை வெளிப்படையாகப் பேசுவதன் மூலம்தான் இதற்கு ஒரு தீர்வு காண முடியும்"

இப்படிக் கூறியிருக்கிறார், 'ஆனந்த விகடன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் அருளானந்தம்!

முதலில் இப்படி உண்மையைப் போட்டு (அதாவது தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்புக்குள் வருகிறார்கள் என்ற உண்மையை) உடைத்ததிற்கு முதலில் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அதே நேரத்தில் இந்த அருளானந்தத்தின் விதண்டவாதத்தனமான குதர்க்கவாதம் நியாயம்தானா என்பதையும் பார்க்க வேண்டும்.

அவரது வாதப்படி நாடுகளுக்கு எல்லைகளே இருக்கக் கூடாது! அவரது கூற்றுப்படி பார்த்தால், இந்தியாவுக்கு சீனாவுடனோ அல்லது வேறு எந்த நாட்டுடனோ எல்லைகளே இருக்கக்கூடாது. தமிழக மீனவர்கள் சீனக் கடலிலும் போய் மீன் பிடிக்கலாம். அமெரிக்க கடலிலும் போய் மீன் பிடிக்கலாம். ரஷ்ய கடலிலும் போய் மீன் பிடிக்கலாம். அதாவது உலகம் முழுவதும் உள்ள கடல்களில், எங்கு வேண்டுமானாலும் போய் மீன் பிடிக்க தமிழக மீனவனுக்கு உரிமை உள்ளது. இதுதான் தமிழர்கள் சொல்லும் உரிமைப் போராட்டம் போலும்.



இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அங்குள்ள 'சிங்கள' அரசாங்கம் கொடுமை செய்வதாக தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் நெஞ்சில் அடித்துக்கொண்டு தினமும் ஒப்பாரி வைக்கின்றன. அதேநேரத்தில் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை அநியாயமாக சுடுவதாகவும் (தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை வன்முறையைப் பயன்படுத்தி தண்டிப்பது தவறான செயல்) கண்டன அறிக்கைகளை வெளியிடுகின்றன. அடேயப்பா.... நீங்கள் எந்த இலங்கைத் தமிழனுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறீர்களோ, அந்த இலங்கைத் தமிழனின் ஒரு அங்கம் தானே, இலங்கை தமிழ் மீனவனும். அப்படியிருக்க அந்த ஈழத் தமிழ் மீனவனின் உரிமையான, அவனது கடல் வளங்களை உங்கள் தமிழக மீனவன் சுரண்டி சூறையாடுவது சரி என்று நீங்கள் விதண்டாவாதம் செய்வது, எந்த வகை நியாயத்தில் அடங்குகிறது?

தமிழக பிழைப்புவாத அரசியல்வாதிகளைத்தான் விடுவோம். இலங்கைத் தமிழனின் ஏகப் பிரதிநிதிகள் தாங்கள்தான் என, புலிகள் விட்ட இடத்திலிருந்து அதே அரசியலைத் தொடரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சரி, புலம்பெயர் புலி ஆசாமிகளும் சரி, ஏன் தமிழக மீனவர்களின் ஊடுருவலுக்கு எதிராக, இலங்கை தமிழ் மீனவர்களின் உரிமைகளுக்கு ஆதரவாக இன்றுவரை குரல் எழுப்புகிறார்கள் இல்லை?

தமது மக்களில் ஒரு பகுதியினரின் உரிமைகளை அந்நிய நாட்டான் தட்டிப் பறிப்பதை கண்மூடி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த 'தமிழ் தேசியவாதிகள்' தானா, முழுத் தமிழ் மக்களினதும் விடுதலையை வென்றெடுத்துக் கொடுக்கப் போகிறார்கள்? சிந்திக்கும் ஆற்றல் உள்ள ஒவ்வொரு ஈழத் தமிழனும் இதுபற்றி கொஞ்சமாவது சிந்திப்பது அவசியம்.

**- மரியதாசன்**


படிப்பகம்